கௌதம் பதிப்பகம்
பேசி: +91-94440-86888 www.gowthampathippagam.in

# இரட்டைமணிமாலை நூல்கள்

## தண்டையார்பேட்டை க. வ திருவேங்கட நாயுடு

இயற்றிய

# கொடியிடையம்மை இரட்டைமணிமாலை

### காப்பு

### வரசித்தி விநாயக வணக்கம்

முத்திக்கு வித்தாகு(ம்) முல்லைக் கொடியிடையாம்
சத்திக்கு இரட்டைமணி சாத்தவே - சித்திக்கும்
பத்திமுதல் பத்தும் உறுபத்து அருளத் துற்றுவர
சத்திஎனும் அத்திமுகன் தாள்.

### நூல்

### நேரிசை வெண்பா

திருவோங்கிடும் அடியர் செவ்வி மனத்து ஓங்கும்
கருவோங்க ஏங்குநரைக் காக்கு(ம்) - மருவோங்கு
முல்லைக் கொடியி டையாள் ஏழையேற்கும்
அல்லல்பவம் அறுக்கும் ஆய்ந்து. 1

### கட்டளைக் கலித்துறை

ஆயும் துறவியர்க்கு ஆரமுதாய், அடியேன்றனக்கு ஓர்
தாயும் சிவம் எனும் தாதையைக் காட்டும் தனித் துணையும்
பாயும் வினைமுதலாம் இருள் சீக்கும் பரிதியும் ஆம்
சாயும் பிறைதவழ் செஞ்சடையான் பங்கில் சார் கொடியே! 2



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

### நேரிசை வெண்பா

கொடிய பவக்கடலில் குப்புற்று வீழா(து)
அடியனையு மாள லழகா - னெடிய சங்கம்
செய்யில் தவழ்முல்லைச் சீர்மாசிலா மணியின்
மெய்யில் திகழ்ஒளியே மேல். 3

### கட்டளைக் கலித்துறை

மேனாடுறும் செல்வமே வந்து வாய்க்கினும் வேட்கை அற்று அவ்
வானாத போகத்து அருவருப்புற்று உன் அடி மலரை
யான் நாடிடும்படி செய்யாய்! புகழ் முல்லை அன்பர் தமக்கு
ஊனா ருயிர்என நின்றான் வலத்து அமர் உத்தமியே! 4

### நேரிசை வெண்பா

உத்தமியே! எத்துணையும் இன்றி உலகமய (ல்)
எத்த வலைப்புண்டு இளைப்பேற்கு - முத்தர்
புகலடையு(ம்) முல்லையில் வாழ் பொற்கொடியே! முத்திச்
சுகமடையு(ம்) மெய்ந் நெறியைச் சொல். 5

### கட்டளைக் கலித்துறை

சொல்லும் பொருளும் என என்னுளத்து நின் தூயடியை
அல்லும் பகலும் இருத்தித் துதித்து நல் அன்புருவாய்ப்
புல்லும்படி அருள் செய்வாய் பகைவர் பொருது அழிய
வெல்லும் செயல் வளவற்கு அருள்வோன் வலமெய்த்துணையே! 6



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

### நேரிசை வெண்பா

துணையேதும் இல்லேன், தொடக்குண்டு அழிவேன்
இணையார் எனக்கு இங்கு இடரில் - தணியாமல்
இட்டளத்தை நாளும் இசைக்கின் கொடியிடையே!
எட்டுணையும் ஆற்றேன் இனி. 7

### கட்டளைக் கலித்துறை

இனியாயினும் எளியேன் அருளாராது இடர் அடைந்தே
நனிவாடிடக் கண்டிருத்தல் நன்றோ? நவைதீர்ந்து இதயம்
பனியாது இயற்றும் தவத்தோர் புகழ் முல்லைப் பைங்கொடியே
சனிவான் பிறவிச் சலநிதிக் காக்கும் தனிப்புணையே! 8

### நேரிசை வெண்பா

தனியே இருந்து அருளாம் தண்ணமுத(ம்) மாந்தி
நனியோம் கிடக் கடைக்கண் நல்காய் - கனிவோங்கு
மன்னே, என் அன்னே, நான் ஆற்றேன், ஆற்றேன், வன்மை
என்னே! கொடியிடையே இன்று! 9

### கட்டளைக் கலித்துறை

இன்றேயலது இவ்வுடல் நாளையே பொன்றும் என்று நல்லோர்
நன்றே அடைய முயன்றனர்; நாயடியேன் தினமும்
சென்றே, அவத்து உழைத்தே, உண்டு. உடுத்துத் திரிந்து, உழலா
நின்றேன்; அருள்முற்றி எங்ஙன் உய்வேன்? முல்லை நின்மலியே! 10



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

### நேரிசை வெண்பா

மலியா உலக மயல்பட்டு அடியேன்
சலியா உழன்று, அலைந்து. சாய்வேன் - கலியாரு
நெஞ்சேன் எனை ஆள நேர்ந்தருள்வாய்! முல்லை என்தாய்!
செஞ்சேல் கடைக்கண்ணால் தேர்ந்து. 11

### கட்டளைக் கலித்துறை

தேர்ந்தே அடியருடன் பயின்று, இன்னருள் தேக்கி இன்பம்
ஆர்ந்தே, பவப்பிணிக்கு ஆரமுதாகும் மடிஇல் அன்பு
கூர்ந்தே மமைய பெற்றுன் குறிவழிக் கூடி நிற்கச்
சார்ந்தேன் என் எண்ண(ம்) முடித்தருள்வாய்! முல்லை தற்பரையே! 12

### நேரிசை வெண்பா

பரையே நினது பதாம்புயத்து நெஞ்சம்
கரையேன்; புகழ் ஒன்றும் கற்றே - உரையேனுக்கு
அல்லல்கொடி இடையே, யாப்புண்டு, அடையாமல்
முல்லைக் கொடியிடையே! முன். 13

### கட்டளைக் கலித்துறை

முன் ஆரணமும் சொலற்கு அரிதாம் புகழ் மூதறிவில்
என்னால் அளக்க இயலுமதோ? எளியேனனைத்
தன்னாவி விட்டு அழவும் இரங்காமை நின்றாய்! கருணைக்கு
என்னாகு(ம்)? முல்லைக் கொடியிடையே! என்ஓர் இன்னுயிரே! 14



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

### நேரிசை வெண்பா

இன்னம் பிறந்து இறக்க எண்ணுகிலேன் எண்ணம் உன்றன்
பொன்னம் கழலிணைக்கே பூணாவேன் - சின்னம்கொள்
சம்பந்தருக்கு இரங்கும் தாயே! அருள்அடிக்கே
சம்பந்தம் கொள்ள அருள்! 15

### கட்டளைக் கலித்துறை

சார்ந்தேன் எனக்குக் குறையுளதோ? தனிச் சீவ தயை
ஆர்ந்தே பொறிவழிச் செல்லா அடியர் அமல மன
நேர்ந்தே நிருமல மாமணியோடு உறு நீர்மை எனச்
சேர்ந்தே கொடியிடையாள் வதி வானவன் சீர் அருளே! 16

### நேரிசை வெண்பா

அருளே திருஉருவாய் அன்பர் அகத்தின்
இருளே இரித்து ஒளிரும் என்தாய்! - மருளேனும்
பாசக் கடல் கடக்கப் பைம் புணையா நின்பதத்தை
நேசித்து எனக்கு அருளாய்! நேர்ந்து. 17

### கட்டளைக் கலித்துறை

நேசித்து நின்னை நினைக்ககில்லேன்; அன்றி நெஞ்சுருகிப்
பூசித்து நின்சரண் போற்றகில்லேன்; புல்லா பொய்ப் புகழை
மோசித்து, நின்னை மொழியகில்லேன் இந்த மூர்க்கன் அந்தோ!
வாசித்து நின் தொண்டன் ஆவது என்றோ? முல்லை அம்பிகையே! 18



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

### நேரிசை வெண்பா

அம்பரத்தார் இன்பநலம் ஆர்ந்தார்; நாயே(ன்)
இம்பரத்தார் தீவினைக்கே ஈடழிவேன் - சம்பரத்தச்
செம்பாதியாய்! முல்லைச் சிற்பரையே! மெய்ப் புலவோர்
நம்பாதியாய் அருளை நல்கு! 19

### கட்டளைக் கலித்துறை

அருள் கொண்டவர் குழுக்கூடினும், அல்லார் அவை புகினும்,
இருள் கொண்டு நல்கூர்ந்திருப்பினும், அன்றி இரப்பவர்த(ம்)
மருள் கொண்டிடும் மிடி மாற்றும் வளமை மருவிடினும்,
தெருள் கொண்டு இரு மனமே! வடமுல்லைத் திருநகரே. 20

திருச்சிற்றம்பலம்

கொடியிடையம்மை இரட்டைமணிமாலை முற்றிற்று

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com